# மெட்ரோ நிலையத்தில் உலக உறுப்பு தான தினம்

**சென்னை, ஆக. 10–**

சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில், உலக உறுப்பு தான தின விழா நடக்கிறது.

வரும், 13ம் தேதி உலக உறுப்பு தான தினத்தையொட்டி, சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில், உலக உறுப்பு தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இதில், உறுப்பு தானத்தின் அவசியம் குறித்து, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட உள்ளன. உறுப்பு தானம் அளிக்கும் பொது மக்கள், கவுரவிக்கப்பட உள்ளனர்.

உடல் உறுப்பு தானம் செய்யப்படும்போது, அறுவை சிகிச்சைக்கு பயன்படும் நவீன மருத்துவ சாதனங்கள், இந்நிகழ்ச்சியில் பயணியரின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்து உள்ளது.